TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1970 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. பி. வீரப்ப கவுண்டர் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1957-ல் இருந்து 1962-வது ஆண்டுவரை **திண்டிவனம்** பொதுத் தொகுதியிலிருந்து **தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. வீரப்ப கவுண்டர்** அவர்கள் 28—1—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் **இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான்** தெரிவிக்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் **கொள்ளுகின்றேன்.**

(மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்--விடைகள்.

*** வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 449, 450, 451 **ஆகியவை** பிறகு எடுத்துக்கொள்ளப்படும். கேள்வி 452 இப்பொழுது **எடுத்துக்** கொள்ளப்படும்.

Ghero by workers of Fisheries Department

* 452 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether Thiru Vijayaraghavan, Tamil Nadu Director of Fishries was gherod on 19th August 1969 for over two hours by about 150 workers of the Indo-Norwegian boat building project at Mandapam, Ramanathapuram district; and

(*b*) if so, the reasons therefor and the action taken by the Government to prevent such gheroes in future?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு மீனளத் துறை இணங்காத தால் தொழிலாளர்கள் எரிச்சலுற்று இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று சொல்லப்படுகிறது. அவசியமான நேர்வுகளில் அவர்களுடைய கோரிக்கைகளை பரிவுடன் கவனிக்க நடவடிக்கை முன்னரே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, மீனளத் துறைத் தொழிலாளர்கள் என்னென்ன கோரிக்கைகளை விடுத்தார்கள் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அவர்கள் கிட்டதட்ட இருபது கோரிக்கைகளைக் கொடுத்திருக்கின்றார்கள். அவற்றில் மிக மிக முக்கியமானது, தினக் கூலி இருக்கக் கூடாது, மாதச் சம்பளம் வரவேண்டும் என்பது. பிறகு, பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெறாத வர்கள் ஆகியவர்களுக்கு அதிகப்படியான சலுகை தரவேண்டும் என்பது ஒரு கோரிக்கை. மருத்துவ வசதி தேவை என்பது ஒன்று. சில பேர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டும் என்பது ஒரு கோரிக்கை. இப்படிப்பட்ட கோரிக்கைகளைத்தான் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

திரு. கே. விநாயகம்: பெரிய அதிகாரிகள் அல்லது உயர்மட்டத்தில் இருப்பவர்கள், அவர்களுக்குக் கீழே இருப்பவர்கள் சொல்லுகிற கோரிக்கைகளுக்கு இணங்கவில்லை யென்றால், இதுமாதிரி 'கேரோ' செய்வது என்பது, அதிகாரபூர்வ மாக அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஓர் ஆயுதமா? அப்படியென்றால், இந்த நாட்டில் அமைதி சூழ்யும். யார் வேண்டுமானாலும் 'கேரோ' செய்வ தற்குச் சட்டபூர்வமான அனுமதியை அரசாங்கம் தருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எந்தக் கிளர்ச் சியையும், எந்த அரசாங்கமும் நிச்சயமாக அனுமதிக்காது. தொழிலாளர் களுக்கேற்பட்ட வெறுப்பின் காரணமாக அவர்கள் கேட்பதெல்லாம் கிடைக்க வில்லை, அவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர்களாகவே இட்டுக்கட்டி எடுத்துக் கொண்டு, உண்டான எரிச்சல் காரணமாக ஏற்பட்ட விளைவுதான் இது. நிச்சயமாக அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ளாது. இதுபோல் எந்தக் கிளர்ச்சியையும் அரசாங்கம் ஒத்துக் கொள்ளாது.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்: அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்றாகிய தினக்கூலியை மாதக் கூலியாக்கவேண்டும் என்பதை அரசு ஏற்றுக் கொண்டதா? ஏற்றுக்கொண்டு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதைச் செயல் படுத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. திங்கள்வாரியாகச் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு அகவிலைப் படி விதத்தை அதிகப்படுத்தும்பொழுது, எல்லாப் பணியாளர்களுக்கும் முன்னதாகச் சம்பள உயர்வைக் கொடுப்பதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், அன்றாட ஊதிய விதத்தைத் திருத்தியமைப்பது இப்பொழுது பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் எவ்வளவு காலமாக அரசாங்கத்தின் முன் இருந்து வந்தது? அவற்றினை வேளாவேளையில் பரிசீலித்து, அவற்றுக்குப் பரிகாரம் தேடாத காரணத்தினால்தான் இந்தச் சம்பவம் நடந்தது என்பதை அரசாங்கம் உணருகிறதா?

1970 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எப்பொழுதிருந்து இந்தக் கோரிக்கை இருந்து வருகிறது என்பதற்கான விவரம் தற்சமயம் என்னிடத்தில் இல்லை. எப்போதுமே சில கோரிக்கைகளைச் சொல்லிக் கொண்டு தான் இருப்பார்கள். கூடுமானவரையில் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வற்றை ஏற்றுக்கொண்டு உடனே பதிலளிக்கிறது. ஏற்றுக்கொள்ள முடியாத பல சிக்கல்கள் உள்ளன. ஊதிய உயர்வு, அதிகப்படியான பதவிகளை ஏற்படுத் வற்றை ஏற்றுக் கொண்டு உடனே பதிலளிக்கிறது. ஏற்றுக்கொள்ள முடியாத பரிசிலனை செய்துதான் பதில் தரவேண்டும். இதனால் ஏற்படுகிற காலதாம தத்தினால் எரிச்சல் உண்டாகி அவர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இறால் மீன் ஏற்றுமதி.

*453 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இறால் என்னும் மீன்வகையினை வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்களே தமிழ் நாட்டிலிருந்து இறால் மீன்களை ஏற்றுமதி செய் கின்றன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அதிராம பட்டணம்-நாகைப்பட்டிணம் பகுதிகளிலிருந்து இறால் ஏற்றுமதி செய்யப்படு வதால் அங்கே அவற்றைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலையொன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா? தமிழ்நாட்டிலிருந்து இறால் ஏற்றுமதி செய் கிறவர்களுக்கு ஆண்டொன்றுக்கு கிடைக்கும் அன்னியச் செலாவணி எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மூன்று தனியார்த் துறையினரின் மூலமாக 1968-69-ஆம் ஆண்டில் 241 டன் உறையவைத்த இறால் களை அனுப்பி அதன்மூலம் ரூ. 40,68,416 பெறப்பட்டிருக்கின்றது. 1—1—1969 லிருந்து 31—10—1969 வரையில் 358.236 டன் உறையவைத்த இறால்களை அனுப்பி அதன்மூலம் ரூ. 72,15,438.91 பெறப்பட்டிருக்கிறது. இதன்மூலம் தமிழக அரசுக்கு கிடைத்த வருமானத்தைக் குறிப்பிட்டேன்.

தஞ்சையில் இப்படி உறையவைக்கும் நிலையத்தை உண்டாக்குகின்ற செயற் குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

திரு. எம். வேதாசலம்: தலைவர் அவர்களே, இந்த இறால் ஏற்றுமதி சென்னை யில் அதிகமாக இருப்பதால் அரசாங்கமே இறால் ஏற்றுமதி செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: என்னுரில் இருக்கும் இண்டோ-மெரைன் ஏஜென்சி (தமிழ்நாடு) லிமிடெட், அரசாங்கத்திற்குச் சொந்தமானது. ஆனால் குத்தகை இந்தக் கம்பெனிக்கு விடப்பட்டிருக்கிறது.